**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், சித்திரை மாதம் 14 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண். 130/2024**

C.N.R.No. TNCB17-000157-2024

நிர்மல் ரோஸ் சிந்தியா, க/பெ. அலெக்ஸ்

ராஜ் குமார், இந்தியன், கிறிஷ்டியன்,

வயது 40, வசிப்பிடம் 9, காசிம் தெரு,

கரூர் மாவட்டம் - 639 0001. ... **வாதி**

// எதிர்//

1. ஊராட்சி தலைவர்,13/33 கண்ணம்பாளையம்

(தேர்வு நிலை) பேரூராட்சி தலைவர் அலுவலகம்,

சின்னராம கவுண்டர் தெரு, கண்ணம்பாளையம்

கிராமம், சூலூர் வட்டம், கோயம்புத்தூர்

மாவட்டம் - 641 402.

2. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்,

சூலூர் மெயின் ரோடு, சூலூர் வட்டம்,

கோயம்புத்தூர் மாவட்டம் - 641 402.

3. வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார

வளர்ச்சி அலுவலகம், சூலூர், சூலூர்

வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர்

அலுவலகம், கோயம்புத்தூர், கோயம்புத்தூர்
மாவட்டம். ... **பிரதிவாதிகள்**

தாவா சொத்தில் பிரதிவாதிகள் சாலையோ அல்லது எவ்வித கட்டுமானமோ வாதியின் சட்டபூர்வ அனுமதியில்லாமல் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாவா செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் : 16.10.2024

வழக்கு மூலம் எழுந்த நாள் 15.04.1998, 12.09.2024 கோயம்புத்தூர், சரவணம்பட்டி கிராமம் இந்நீதிமன்ற அதிகார எல்லை வரம்புக்குட்பட்டது.

வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு வாதியின் தோராயமான வழக்கு பொறுமானம் ரூ.1000/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் சட்டம் பிரிவு 27(சி)ன் படி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.30/-.

**பொறுமானத்திற்கான விவரங்கள்**

| | |
|---|---|
| வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு வாதியின் வழக்கு பொறுமானம் | ரூ.1000/- |
| இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் சட்டம் பிரிவு 27(சி) ன் படி செலுத்தப்பட்டுள்ள கீழ் நீதிமன்ற கட்டணம் | ரூ.30/- |
| மொத்தம் செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.30/- |

இந்த வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.J.வனஜா, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை

நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்பாணை

1. தாவா சொத்தில் பிரதிவாதிகள் சாலையோ அல்லது எவ்வித கட்டுமானமோ வாதியின் சட்டபூர்வ அனுமதியில்லாமல் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

## செலவு தொகை பட்டியல்

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

## சொத்து விபரம்

திருப்பூர் பதிவு மாவட்டம், சூலூர் துணைப்பதிவு மாவட்டம், பல்லடம் வட்டம், (தற்பொழுது கோயமுத்தூர் பதிவு மாவட்டம், சூலூர் துணைப்பதிவு மாவட்டம், சூலூர் வட்டம்) கண்ணம்பாளையம் கிராமம் க.ச.பு.335/2 நெ.காலை ஏ. 7.26 க்கு தரம் ரூ. 8.13 இதில்

நஞ்சப்ப கவுண்டர் பூமிக்கும் - வடக்கு

நாளது தேதியில் எங்களிடம் கிரையம் பெறும்
எப். மதலை முத்து ஜெய்க்குமார் காலியிடத்திற்கும் - கிழக்கு

ரங்கசாமி பூமிக்கும், 10 அடி அகலமுள்ள தென்வடல் தடத்திற்கும் - தெற்கு

தென்வடல் வண்டி தடத்திற்கும், வாய்க்காலுக்கும் - மேற்கு

இதன் மத்தியில்

ஏ.0.12 (பனிரெண்டு) சென்ட் விஸ்தீரணமுள்ள காலியிடமும், ஷை க.ச. 335/2 நெ. காலையில் 2096/1962 நெ பாக சாசனப்படி பாத்தியப்பட்ட து.கிணர் 1 ல் எங்களுக்குப் பாத்தியப்பட்டது 6 ல் 1 பங்கில் 3 ல் 1 பங்கும், ஷை கிணற்றில் வைத்துள்ள 5 எச்.பி. மின்சார மோட்டார் பம்பு செட் வகையராவில் எங்களுக்குப் பாத்தியப்பட்ட 6 ல் 1 பங்கில் 3 ல் 1 பங்கும் சகிதம்.

ஷை கிரைய இடத்திற்கு க.ச. 335/2 நெ. காலைக்கு வடபுறமுள்ள கிழமேல் இட்டேரியிலிருந்து தெற்கே வந்து கிழமேலாக வாரிக்கு வடபுரம் வந்து வாரியின் குறுக்காகவும் பொதுவிடத்தின் வழியாகவும் ஷை காலையின் தெற்குப் பொழி வரை செல்லும் 10 அடி அகலமுள்ள தடத்தின் மூலமும்,

ஷை கிழமேல் இட்டேரியிலிருந்து தெற்கே வந்து சாலைக்கு வடபுறம் பொதுவிடம் வழியாக மேற்கே போய் சாலைக்குப் பின்புறம் தென்வடலாகப் போகும் 10 அடி அகலமுள்ள வண்டித்தடத்தின் மூலமும் தாங்கள் வண்டி வாகனாதிகள் வகையரா ஓட்டி வழிநடை நடந்து கொள்ள வேண்டியது.

ஷை சொத்து கண்ணம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்டது.

ஷை இடத்தின் மதிப்பு - ரூபாய் 47,088.00

து. கிணர் 1 ல் 1/6 பங்கில் 3 ல் 1 பங்கு - ரூபாய் 1,115.00

ஷை கிணற்றில் வைத்துள்ள 5 எச்.பி

மின்சார மோட்டார் வகையராவில் 1/6

| | | |
|---|---|---|
| பங்கில் 3 ல் 1 பங்கு | - | ரூபாய் 280.00 |
| தடபாத்திய மதிப்பு | - | ரூபாய் 117.00 |
| | | ----------------------------------------------------- |
| ஆக மொத்த மதிப்பு | - | ரூபாய் 48,600.00 |
| | | ----------------------------------------------------- |

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர், அசல் வழக்கு எண்.130/2024

தீர்ப்பாணை, நாள்: 27.04.2026